<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | DVC No.07/2022 | Date: 13.10.2025 |
| Deposition of Witness for | : | **எ.சா.1** | |
| Name | : | **ஸ்ரீநிவாசன்** | |

**<u>குறுக்கு விசாரணை</u> :-**

1) எனக்கும், மனுதாரருக்கும் நடந்த திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடந்த திருமணம் என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு உறவுமுறையா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் மனுதாரரின் குடும்பத்தினரை எனக்கு தெரியும் என்றால் கல்யாண புரோக்கர் மூலமாக தெரியும். கல்யாண புரோக்கர் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ராசிபுரத்தை சார்ந்தவர். எனக்கும், மனுதாரருக்கும் நடந்த திருமணம் பவானி கூடுதுறையில் நடந்து வரவேற்பு பச்சாம்பாளையம் KS குருசாமி கவுண்டர் திருமண மண்டபத்தில் நடந்தது என்றால் சரிதான்.

2) எனக்கும், மனுதாரருக்கும் பவானி கூடுதுறையில் உள்ள சங்கமேஸ்வரர் கோவிலில் நடந்த திருமணத்திற்கு என்னென்ன ஆவணங்கள் கேட்டார்கள் என்றால் ஆதார்கார்டு, டி.சி., சாதி சான்றிதழ் ஆகியவை கேட்டார்கள். கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ், திருமண பத்திரிக்கை ஆகியவை கேட்டார்களா என்றால் கேட்டார்கள், அதை நான் பெற்று கொடுத்தேன். கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் எதற்காக கேட்டார்கள் என்றால் நான் வசிக்கும் இடத்திற்காக கேட்டார்கள். வேறு ஏதேனும் காரணத்திற்காக கேட்டார்களா என்றால் இல்லை.

3) என்னிடம் காட்டப்படும் ஆவணம் கிராம நிர்வாக அலுவலரிடம் நான் பெற்ற ஆவணத்தின் நகல் என்றால் சரிதான். அசல் ஆவணத்தை பவானி கூடுதுறையில் உள்ள சங்கமேஸ்வரர் கோவிலில் நடந்த திருமணத்திற்கு கொடுத்துவிட்டேன். (**கிராம நிர்வாக அலுவலரிடம் நான் பெற்ற சான்றிதழின் நகல் ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் எனக்கும், மனுதாரருக்கும் நடக்க இருந்த திருமணம் முதல் திருமணம் என்று சான்றிதழ் வழங்கியுள்ளதற்கான ஆவணம் என்றால் சரிதான். மனுதாரர் நீதிமன்றத்தில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) நான் கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் HMOP NO.101/2019 என்ற மனுவை தாக்கல் செய்து நித்யா என்ற பெண்ணை முதல் திருமணம் செய்து விவாகரத்து பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், நித்யா என்ற பெண்ணுக்கும் 29-06-2016 ம் தேதியன்று திருமணம் நடந்தது என்றால் சரிதான். 14-10-2019 ம் தேதி எனக்கும், நித்யாவிற்கும் விவாகரத்து பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 01-12-2019 ம் தேதி மனுதாரரை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) நான் உண்மைத்தன்மையை மறைத்து கிராம நிர்வாக அலுவலரிடம் எனக்கு இதுதான் முதல் திருமணம் என்ற சான்றிதழ் பெற்று மனுதாரரை ஏமாற்றி திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் தரகரிடமும், மனுதாரரின் குடும்பத்தினரிடம் உண்மையை சொல்லி தான் திருமணம் செய்தேன். நான் ஏற்கனவே திருமணம் செய்த விவரம் மனுதாரருக்கோ, அவரது தந்தைக்கு தெரியுமா

என்றால் மனுதாரருக்கு தெரியும். நான் சொல்வது பொய் என்றும், நான் ஏற்கனவே திருமணம் செய்த விவரம் மனுதாரருக்கு தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) மனுதாருடன் செய்த திருமணத்திற்கு சீர்வரிசையாக என்னென்ன செய்தார்கள் என்றால் அரை பவுன் தங்க மோதிரம் போட்டார்கள். திருமண செலவுகளை யார் செய்தது என்றால் இரு வீட்டாரும் பாதிக்கு பாதி செய்து கொண்டோம். நான் சொல்வது தவறு என்றும், 3.5 பவுன் நடை போட்டார்கள் என்றும், பாத்திரங்கள் வாங்குவதற்காக ரூ.40,000/-ம், பெட்டி பணம் ரூ.25,000/-ம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. திருமண வரவேற்புக்கு ஆன செலவுகள் அனைத்தும் மனுதாரரின் குடும்பத்தினர் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல.

7) நான் தாக்கல் செய்த பதிலுரையில் திருமண செலவுகள் செய்தது குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். நான் மேற்சொன்னவாறு பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நானும், மனுதாரும் திருமணத்திற்கு பின்னிட்டு எங்கு குடியேறினோம் என்றால் இரண்டு நாட்கள் கள்ளக்குறிச்சியிலும், 10 நாட்கள் மனுதாரரின் தகப்பனார் வீட்டிலும் இருந்தோம், அதன்பிறகு கொரானா வந்ததால் அவரின் தகப்பனார் வீட்டில் தான் இருந்தார். எத்தனை நாட்கள் நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் இருவரும் திருமணத்திற்கு பின்னிட்டு சேர்ந்தே சரியாக வாழவில்லை. நான் இதுசம்பந்தமாக புகார் அளித்தேனா, பஞ்சாயத்து பேசினேனா என்றால் இல்லை, மனுதாரரின் பெற்றோர்களிடம் சொன்னேன்.

8) மனுதாரர்கள் போட்ட 3.5 பவுன் நகையை நான் எங்கள் ஊரை சார்ந்த கோமதி என்பவரிடம் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்துவதற்காக நகையை அடமானம் வைத்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. கோமதி என்மீது 21-03-2020 ம் தேதி கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் ரூ.40,000/-ம் பணம் பெற்றும், 1.5 பவுன் தங்க நகையை பெற்றதாகவும் புகார் அளித்திருந்தார் என்றால் புகார் அளித்திருந்தார், ஆனால் அது பொய் புகார் ஆகும். நான் அதற்காக தான் மனுதாரரின் நகையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. செல்வராணி என்பருடன் நான் புகைப்படம் எடுத்து மனுதாரரை மிரட்டினேன் என்றால் சரியல்ல, செல்வராணி எனது குடும்ப நண்பர். நான் மனுதாரரை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்தில் நிறைய பெண்களை வைத்து மிரட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

9) நான் கள்ளக்குறிச்சியில் கிளினிக் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். அந்த கட்டிடம் வாடகை கட்டிடம் என்றால் சரிதான். அதன் உரிமையாளரின் பெயர் என்ன என்றால் பிரேம்குமார் ஆகும். 2020 ம் ஆண்டு நான் முருகேசன் என்பவரின் கட்டிடத்தில் கிளினிக் வைத்திருந்தேனா என்றால் 06 மாதங்கள் வைத்திருந்தேன். முருகேசன் என்பவர் வாடகை பாக்கிக்காக நான் ரூ.1,50,000/-ற்கு கொடுத்த காசோலை வசூலாகததால் என்மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ரூ.40,000/-ற்காக தான் தாக்கல் செய்தார், நான் முதல் வாய்தாவிலேயே ரூ.40,000/-ம் பணத்தை கொடுத்து வழக்கை முடித்துகொண்டேன்.

10) நான் முதல் வாய்தாவிலேயே ரூ.40,000/-ம் பணத்தை கொடுத்து வழக்கை முடித்துகொண்டேன் என்று சொல்வதுபொய் என்றும், நான் 2022 ம் ஆண்டு தான் மனுதாரரிடம் ரூ.1,50,000/-ம் பெற்று மக்கள் நீதிமன்றத்தின் மூலமாக

காசோலை வழக்கை முடித்துகொண்டேன் என்றால் சரியல்ல. செல்வராணி என்பவருக்கு நான் ரூ.10,00,000/-ம் கொடுக்க வேண்டும் என்பதால் நான், 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு மனுதாரரை ரூ.10,00,000/-ம் பெற்று வருமாறு அடித்து துன்புறுத்தினோம் என்றால் சரியல்ல. அங்கிருந்து தப்பித்து வந்து தான் மனுதாரர் அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்ககிரியில் புகார் அளித்தார் என்றால் புகார் கொடுத்திருப்பதாக என்னை விசாரணைக்கு வரச்சொன்னார்கள். அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்ககிரியில் புகார் அளித்தும் நான் விசாரணைக்கு வரவில்லை என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தேன் என்றால் சரியல்ல.

11) அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்ககிரியில் அளித்திருந்த புகாரில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால் நான் வரதட்சணை வாங்கியதாகவும், மனுதாரரை அடித்து துன்புறுத்தியதாகவும் புகார் அளித்திருந்தார். அனைத்து மகளிர் காவல் நிலையம், சங்ககிரிக்கு ஒருமுறை தான் விசாரணைக்கு வந்தேன் என்றும், அப்போது ஒருமாத காலம் அவகாசம் கேட்டு எழுதி கொடுத்து சென்றேன் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு, நான் கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் HMOP NO.174/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

12) மேற்படி, மனு என்ன ஆனது என்றால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Trop தாக்கல் செய்து உத்தரவு பெற்று சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் மாற்றப்பட்டது. அந்த வழக்கு எண் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் HMOP NO.25/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எனக்கும், மனுதாரருக்கும் நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டு நான் ஆஜராகாததால் கடந்த 21-07-2023 ம் தேதி மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Trop மனுவில் என்ன காரணம் கூறி மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. Trop மனுவில் கள்ளக்குறிச்சி நீதிமன்றம் வந்தால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக மனுவில் கூறி தான் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே, மனுதாரரை திருமணம் செய்து வாழ்வதற்காக செய்யவில்லை என்றும், மனுதாரரின் பெற்றோரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் மனுதாரரை திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14) மனுதாரரின் தந்தை இந்தியா சிமெண்ட் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார் என்றும், மனுதாரரின் தாய் அங்கன்வாடி மையத்தில் வேலை செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும், நான் பணத்திற்காக தான் திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் திருமணத்திற்கு முன்பு கம்யூட்டர் சென்டரில் பணிபுரிந்தார் என்றும், திருமணத்திற்கு பின்பு அவர் கம்யூட்டர் சென்டருக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, குமாரபாளையத்தில் மனுதாரர் V-Tech computer Education என்ற பெயரில் கம்யூட்டர் சென்டர் வைத்து நடத்தி வருகிறார், அதனால் தான் அவர் கள்ளக்குறிச்சிக்கு வந்து என்னுடன் வாழ மறுத்துவிட்டார், என்னை வீட்டோடு

மாப்பிள்ளையாக வரச்சொன்னார்கள், நான் மறுத்ததால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது.

15) மனுதாரர் V-Tech computer Education என்ற பெயரில் கம்யூட்டர் சென்டர் வைத்து நடத்தி வருகிறார் என்று நான் முதன்முதலில் நான் தற்போது நீதிமன்றத்தில் தான் சொல்கிறேன் என்றும், நான் பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னை வீட்டோடு மாப்பிள்ளையாக வரச்சொன்னார்கள் என்று நான் பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்களுக்குள் திருமணம் நடந்து மூன்று மாதங்களுக்குள்ளாக மனுதாரரின் பெற்றோரின் வீட்டிற்கு ஒரு பண்டிகைக்காக மனுதாரரை அனுப்பிவிட்டேன் என்றும், தனக்கு விபத்து ஏற்பட்டதாக கூறி மனுதாரரிடம் ரூ.14,000/-ம் பெற்றேன் என்றால் சரியல்ல, நான் தான் புகார்தாரரை அவரது தந்தை வீட்டில் விட்டுவிட்டு அவரது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததற்காக ரூ.40,000/-ம் பணம் கொடுத்துவிட்டு சென்றேன்.

16) நான் மேற்சொன்னவாறு, எனது பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றும், முதன்முறையாக தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஆயுர்வேத மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எனது மாத வருமானம் என்ன என்றால் குறைந்தபட்சம் ரூ.5,00,000/-ம் வரும். நான் எனது மாத வருமானத்தை கணக்குகளை பராமரித்து வருகிறேனா என்றால் வைத்துள்ளேன். எனது மாத வருமானம் ரூ.5,00,000/- காண்பிப்பதற்காக ஆவணத்தை தாக்கல் செய்ய தாயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் எனது தணிக்கையாளரை கேட்டு தாக்கல் செய்கிறேன்.

17) எனது மாத வருமானம் குறித்து பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரரை திருமணம் செய்ததே பணத்தேவைக்காக தான் என்றால் சரியல்ல. நான் மனுதாரருடன் ஒரு நாள் கூட குடும்பம் நடத்தவில்லை என்றால் சரிதான். சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை வாபஸ் பெற வேண்டும் என்று மனுதாரரை மிரட்டியதால் தான் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

18) நான் மனுதாரரை பலமுறை வாட்ஸ் ஆப் மூலம் தகாத வார்த்தைகளால் திட்டியதை மனுதாரர் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரிடம் முதல் திருமணம் என்று பொய்யாக சான்றிதழ் பெற்றுள்ளதால் நானும், 02 முதல் 04 வரையிலான எதிர்மனுதாரர்களும் சட்டப்படி தண்டிக்கவர்கள் என்றால் சரியல்ல. மனுதாரிடம் பலமுறை வரதட்சணை கேட்டு மிரட்டி, கொடுமைபடுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் திருமணத்தின்போது அவர்கள் வீட்டில் இருந்து சீர்வரிசையாக கொடுத்த 3.5 பவுன் நகை மற்றும் குடும்பம் நடத்துவதற்கு பாத்திரம் வாங்குவதற்காக கொடுத்த ரூ.40,000/-ம் பணம் மற்றும் பெட்டியில் வைத்து கொடுத்த ரூ.25,000/-ம் பணத்தையும், திருமண வரவேற்பிற்காக கொடுத்த ரூ.3,00,000/-ம் பணம், திருமணத்திற்கு பின்னிட்டு வாங்கிய ரூ.1,64,000/-ம் பணத்தையும் நான் மனுதாரருக்கு திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

19) மாதம் ரூ.5,00,000/-ம் வருமானம் வருவதால் மனுதாரர் எனது மனைவி என்ற முறையில் நான் அவருக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் குறுக்கு விசாரணையில் சொன்ன சங்கதிகளை, நான் எனது

பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடாமல் இன்று தான் முதன்முதலாக நீதிமன்றத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மனுவில் உள்ள பரிகாரங்களை பெறத்தக்கவர் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Srinivasan

Judicial Magistrate No.1,

Sankari.